செ.வெண்.260 நாள்.20.04.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கிராம சுயாட்சி இயக்கம் மற்றும் கோடை காலத்தில் குடிநீர் தேவைகளை சமாளித்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கிராம சுயாட்சி இயக்கம், வளர்ச்சி திட்டங்கள் மற்றும் கோடை காலத்தில் குடிநீர் தேவைகளை சமாளித்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.04.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலர்/ தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் பேசியதாவது:-

கிராம சுயாட்சி இயக்கம் ஏப்ரல் 14 முதல் மே 5 வரை நடைபெற்று வருகிறது. இத்திட்டம் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும். குறிப்பாக நமது மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள 29 கிராமங்களிலும் மத்திய அரசின் 7 திட்டங்களும் 100 சதவீதம் செயல்படுத்த வேண்டும். 29 கிராமங்களிலும் எரிவாயு இணைப்புகள் முழுமையாக வழங்கிடவும், எல்இடி பல்புகள் மானிய விலையில் வழங்கிட வேண்டும். மேலும் சுகாதாரத்துறையின் மூலம் கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் போட வேண்டும். மேலும் கிராம சுயாட்சி இயக்கத்தில் செயல்படுத்த சொல்லப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும். மேலும் எதிர் வரும் கோடை காலத்தில் குடிநீர் விநியோக பணிகள் சீராக செயல்படுத்த வேண்டும். அணைகளின் நீர் இருப்பு குடிநீர் தேவை ஆகியவைகளை கணக்கில் கொள்ள வேண்டும். மேலும் போர்வெல் அமைக்கும் திட்டங்கள், குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகளை உடனடியாக முடிக்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளிலும் குடிநீர் சீராக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை குறித்த காலத்தில் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, கிராம சுயாட்சி இயக்க மத்திய பார்வையாளர்கள் திரு.கலாதரன், திரு.பத்மநாபன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி,

********